**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**OS.No.58/2023**

தேதி: 24.10.2025

பெயர் : ராஜகுமார் (வா.சா.2) த/பெ: கந்தசாமி

**குறுக்குவிசாரணை**

1. பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாதி எனக்கு நண்பர் என்றால் அவர் எனக்கு தெரிந்தவர். வாதி எந்த வருடம் யாரிடமிருந்து சொத்து வாங்கினார் என்றால் 1975ம் வருடம் தாயன் செல்லம்மாள் என்பவரிடம் வாங்கினார். அந்த சொத்தின் சர்வே எண் தெரியாது. அந்த சொத்தின் நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியும். ஆறுமுக கவுண்டர் காட்டிற்கும் கிழக்கு, ராமையா காட்டிற்கும் தெற்கு, காத்தான் காட்டிற்கும் வடக்கு. வாதி வாங்கியசொத்து எவ்வளவு இடம் என்றால் 14 செண்ட் ஆகும். தாயன் என்பவரின் அப்பா பெயர் தெரியாது. தாயன் உடன் பிறந்தவர்கள் யார் என்று தெரியாது. தாயன் என்பவருக்கு சொத்து எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது. வாதி இந்த வழக்கை பாதைக்காக தாக்கல் செய்துள்ளார். வாதிக்கும் காத்தான் என்பவருக்கும் பாதை பிரச்சினை இருந்து வருகிறது என்றால் சரிதான். வாதி நிலத்திற்கு காத்தான் நிலம் வழியாகத்தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான்.

2. அங்கு வாரி உள்ளது, அதன் வழியாகவும் வாதி செல்லலாம் என்றால் சரிதான். 14 செண்ட் நிலத்தில் 3 நபர்களான தாயன், சுருட்டையன் என்ற பெருமாள், வடகிரி ஆகியோர்களுக்கு பங்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பாதை சம்மந்தமாக வாதி மாவட்ட ஆட்சியருக்கு புகார் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். வாதி தன் காட்டிற்கு சென்றதை காத்தன் தடுத்தார் என காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம்.

காவல்நிலையத்தில் என்ன பேசி முடித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. வாதி எனக்கு நன்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தைப்பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் தான் கேட்க முடியும் என்றும், விளம்புகை பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

(ஒம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.